# கிறிஸ்தவப் பின்நவீனத்துவம்
## – ஒரு சமகாலப் பார்வை –

ஆயர்.வ.தியோகுப்பிள்ளை
அறக்கொடைப் பேருரை

**25.10.2021**

அருட்கலாநிதி J. C. போல் றொகான்
(துறைத்தலைவர் / முதுநிலை விரிவுரையாளர்,
கிறிஸ்தவ நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

யாழ். மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியம்
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்

# கிறிஸ்தவப் பின்நவீனத்துவம்
## - ஒரு சமகாலப் பார்வை -
### ஆயர்.வ.தியோகுப்பிள்ளை அறக்கொடைப் பேருரை

அருட்கலாநிதி J. C. போல் றொகான்
(துறைத்தலைவர்/முதுநிலை விரிவுரையாளர்,
கிறிஸ்தவ நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**அறிமுகம்**

கிறிஸ்தவத்தின் நீண்ட வரலாற்றின் 21 நூற்றாண்டுகளிலும் ஒரே மாதிரியான சமய, சமூக, கலாசார, அறிவியல், அரசியல், பொருளாதார நிலைமைகள் உலகில் இருக்கவில்லை. இவ்வரலாற்றுக் காலங்களில் கிறிஸ்தவம் ஒரே மாதிரியான ஏற்பினையும் உலகில் பெற்றிருக்கவுமில்லை. கிறிஸ்தவம் உலக வரலாற்றில் வளர்ந்த போது, பல மாறுபட்ட சூழல்களையும், அறிவியல் மாற்றங்களையும், சிந்தனைச் செல்நெறிகளையும் எதிர்கொண்டது. இவை கிறிஸ்தவத்தின் அணுகுமுறைகளையும், இறையியல் பார்வை களையும், செயற்பாட்டு வியூகங்களையும் தேவைக்கேற்ப மாற்றின. அவசிய மானவற்றை விசாலமடையச் செய்தன. தேவையற்றனவற்றை அகற்றின. இதன்மூலம் கிறிஸ்தவத்தின் மையச்சிந்தனை முறைமைகள் உலக வரலாற்றின் கால ஓட்டத்திற்கேற்ப இயைபாக்கம் பெற்றமை தெளிவாகிறது. மாற்றமடைந்து வந்த வரலாற்றுக் காலங்களுக்குரிய மையச்சிந்தனைகளைப் பிரதிபலித்துப் புதிய செல்நெறிகளைக் கிறிஸ்தவம் உள்வாங்கியது.

மேலைத்தேயச் சிந்தனை மரபைப் புராதன காலம், மத்திய காலம், நவீன காலம், சமகாலம் எனப் பிரித்து நோக்குவர். புராதன காலத்தில் கிரேக்க ஞானிகளின் இயற்கையை மையப்படுத்திய விஞ்ஞான - மெய்யியல் அணுகுமுறைகளின் பின்னணியில் மனிதச் சிந்தனைகளின் மையமாகப் பிரபஞ்சம் விளங்கியது. மத்திய காலத்தில் கிறிஸ்தவ சமயத்தின் மேலாண்மை நிலையில் அனைத்து மனிதச் சிந்தனைகளின் மையமாகக் கடவுள் விளங்கினார். நவீனகாலத்தில் தோன்றிய அறிவொளிர்வாதம் (illuminism) மனித அறிவுக்கு அழுத்தம் கொடுத்த பின்னணியில் அனைத்தினதும் மையமாக மனிதம் உருவெடுத்தது. சமகாலம் நவீனத்துவத்தின் மனிதமையச்

சிந்தனை நீட்சிகளை உள்வாங்கி, பூகோளமயமாதல், பூகோளக் கிராமம், ஒருங்கிணைந்த உலகம் போன்ற சிந்தனைகளையும், செயற்கை அறிவு (artificial intelligence - AI), மீநுண்தொழில்நுட்ப (nanotechnology) ஆய்வுகளையும் மையமாகக் கொண்ட பின்நவீனத்துவச் செல்நெறிகள் மூலம் இயங்கிக் கொண்டுள்ளது.

மேலைத்தேய வரலாற்றுக் காலப்பகுதிகளை மையமாக வைத்தே மேற்கூறப்பட்ட நான்கு பிரிவுகளும் முன்வைக்கப்படுகின்றன. இவற்றுள் மேலைத்தேயத்தின் புராதன காலமான கிரேக்க வரலாற்றையடுத்து மேலைத்தேய வரலாறாக கிறிஸ்தவ வரலாறு மாறியது. மத்தியகாலக் கிறிஸ்தவ மேலாண்மை நிலையில் மேலைத்தேய வரலாற்றின் அனைத்து அம்சங்களையும், நெல்நெறிகளையும் கிறிஸ்தவம் ஊடுருவியது. ஆயினும் நவீனத்துவம் தனது மனிதமையச்சிந்தனை அழுத்தங்களால் மேலைத்தேய வரலாற்றைப் படிப்படியாகச் சமயச்சார்பற்றதாக்கியது. பின்நவீனத்துவம் மேலைத்தேய வரலாற்றை முற்றுமுழுதாக உலகியல் மயப்படுத்தியது. இது கிறிஸ்தவத்தின் கோட்டை என அழைக்கப்பட்ட ஐரோப்பாவில் கிறிஸ்தவத்தை 'அந்நியப்படுத்தப்பட்ட' ஒரு நிலைக்கு இட்டுச் சென்றது.

## ஆய்வின் நோக்கு (Aim)

சமகால உலகை எல்லா நிலைகளிலும் பின்நவீனத்துவம் வியாபித்துள்ளது. ஐரோப்பாவில் கிறிஸ்தவத்தை 'அந்நியப்படுத்தப்பட்ட' நிலைக்கு இட்டுச் சென்ற பின்நவீனத்துவத்தின் பிடிகளில் இருந்து உலகளாவிய கிறிஸ்தவத்தைத் தக்கவைத்துக் கொள்ள பின்நவீனத்துவப் பின்னணிகள் புரிந்து கொள்ளப்பட்டு, 'கிறிஸ்தவப் பின்நவீனத்துவம்' பற்றிய ஒரு சமகாலப்பார்வை உருவாக்கப்படுதல் இன்றியமையாதது. இதன்மூலம் பின்நவீனத்துவப் பேரலைகளுக்குள் கிறிஸ்தவ விழுமியங்கள் மூழ்கடிக்கப்படாது பேணப்படலாம். இதனையே இவ் ஆய்வு பிரதான நோக்காகக் கொண்டுள்ளது.

## ஆய்வின் இலக்குகள் (Objectives)

ஆய்வின் பிரதான நோக்கை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் நான்கு இலக்குகள் முன்வைக்கப்படுகின்றன:

1. நவீனத்துவம், பின்நவீனத்துவம் ஆகிய கருத்தாக்கங்களை விளக்குதல்
2. பின்நவீனத்துவத்தின் எதிர்மறைத் தன்மைகளை இனங்காணுதல்

3. சமகாலக் கிறிஸ்தவத்தில் ஊடுருவியுள்ள பின்நவீனத்துவப் போக்குகளை முன்வைத்தல்

4. பின்நவீனத்துவப் பேரலைகளில் இருந்து கிறிஸ்தவத்தைத் தக்கவைக்க 'கிறிஸ்தவப் பின்நவீனத்துவம்' பற்றிய நேரிய கருத்தாடலை உருவாக்குதல்

## ஆய்வின் கருதுகோள்கள் (hypotheses)

பின்நவீனத்துவம் என்பது சமகால உலகின் தவிர்க்கமுடியாத ஒரு சிந்தனைச் செல்நெறியாகும். இதுதான் என்று நேரடியாக வரையறுக்க முடியாத ஒரு செல்நெறியாகவே பின்நவீனத்துவம் அமைந்துள்ளது. ஆகவே கிறிஸ்தவம் தனது சிந்தனைச் செல்நெறிகளில் பின்நவீனத்துவப் போக்குகளை எதிர்கொள்வதற்கான முறைகளை உருவாக்கவேண்டும்.

'கிறிஸ்தவப் பின்நவீனத்துவம்' என்ற கருத்தாக்கத்தை தூய்மைப்படுத்தித் தெளிவு பெறுவதன் மூலமாக பின்நவீனத்துவத்தின் எதிர்மறைப் பேரலைகளில் இருந்து கிறிஸ்தவத்தைத் தக்கவைக்கமுடியும்.

பின்நவீனத்துவம் தன்னகத்தே பல சாதக, பாதக விளைவுகளைக் கொண்டுள்ளது. 'கிறிஸ்தவப் பின்நவீனத்துவம்' பின்நவீனத்துவத்தின் சாதக விளைவுகளை உள்வாங்கிச் சமகால உலகில் தனது இருப்பை அர்த்தமுள்ள தாக்கலாம்.

## முன்னுரை

இயேசுக்கிறிஸ்து உலகிற்குக் கொணர்ந்த 'நற்செய்தியே' கிறிஸ்தவத்தினது சாராம்சமாகும். அச்செய்தி கடவுளால், இயேசுக்கிறிஸ்துவில் நிகழ்ந்த இறைவெளிப்பாட்டின் மூலம் கொடுக்கப்பட்டதென்பதால் அதில் எந்தவித மான மாற்றமும் ஒருபோதும் ஏற்படமுடியாது. ஆனால் காலத்துக்குக்காலம் உலக வரலாற்றில் தோன்றிய சிந்தனைச் செல்நெறிகளின் செல்வாக்குகளால் கிறிஸ்தவத்தின் அடிப்படையான 'நற்செய்தி' பல்வேறு வகையான விளக்கங்களையும், விரித்துரைப்புக்களையும் பெற்றிருப்பது கண்கூடு. இது ஒரு வரலாற்றுச் சமயத்திற்கு ஏற்படக் கூடிய ஆபத்துமிக்க சவால். ஓர் இயற்கைச் சமயத்திற்கு இவ்வாறான ஆபத்துக்கள் இல்லை.

இப்பின்னணியில் சமகால உலகின் சிந்தனைச் செல்நெறிகளின் ஒருங்கிணைப்பாகக் கருதப்படும் பின்நவீனத்துவப் பின்னணியில் 'கிறிஸ்தவப் பின்நவீனத்துவம்' (Christian post-modernism) பற்றிய ஒரு பார்வை

அவசியமாகிறது. பின்நவீனத்துவச் செல்நெறிகள் கிறிஸ்தவத்தின் அடிப்படையான செய்தியில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டாலும், அச் செய்திக்கு அவை கொடுத்த உலகியல் போக்கான, சார்புத் தன்மையான பொருள்விளக்கங்கள் நம்பிக்கையாளர்களால் அப்படியே ஏற்கப்பட்டு கிறிஸ்தவத்தின் இன்றியமையாத சாராம்சமே சமகாலத்தில் சில அடிப்படையான மாற்றங்களுக்கும், பல பிழையான புரிதல்களுக்கும் உட்படுத்தப்பட்டமை மறுக்கப்பட முடியாது. 'கிறிஸ்தவ' என்ற அடைமொழியோடு பின்நவீனத்துவம் என்ற கருத்து இணைந்து உருவான அச்சிந்தனைச் செல்நெறி பற்றிய ஒருசமகால விமர்சனப் பார்வையை இது கோரிநிற்கிறது.

## நவீனத்துவமும் பின்நவீனத்துவமும்

கிறிஸ்தவம் என்ற பெயரடையுடன் உள்ள கிறிஸ்தவப் பின்நவீனத்துவம் என்ற செல்நெறியை விளங்குவதற்கு, பின்நவீனத்துவச் செல்நெறிப் பேரலைகளையும், அவைகள் உருவாகக் காரணமான நவீனத்துவத்தையும் (modernism) தெளிவு படுத்தல் அவசியம். 'பின்நவீனத்துவம்' என்ற வார்த்தை அதற்கு முன்னால் 'நவீனத்துவம்' இருந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக்காட்டுகிறது. (கா. சிவத்தம்பி, 2001, 182)

நவீனத்துவம் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்து கி.பி. 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை ஐரோப்பிய சிந்தனை மரபை ஆக்கிரமித்து வைத்திருந்த ஒரு சிந்தனைச் செல்நெறி. அறிவின் கிளர்ச்சிக்காலம் (enlightenment era) என்று மெய்யியலிலும், ஏனைய அறிவுத்துறைகளிலும் குறிப்பிடப்படும் காலம். வெறுமனே ஒரு சிந்தனைச் செல்நெறியாக மட்டுமல்லாது ஐரோப்பியர்களது வாழ்வியலாகவும் நவீனத்துவம் மாறியது. பொதுவான அடிப்படையில் மேலைத்தேய வரலாறு கிரேக்க நாகரிகத்தின் புராதன காலத்தில் இருந்து ஆரம்பித்து கிறிஸ்தவத்தின் மேலாண்மைக் காலமான மத்திய காலத்தில் ஏறத்தாழ பத்து நீண்ட நூற்றாண்டுகள் பயணித்து நவீனத்துவத்துக்குள் நுழைந்தது. கிரேக்க நாகரிகத்தின் மேலாதிக்க நிலையான புராதன (ஹெலனிச) காலத்தில் பிரபஞ்ச - இயற்கை மையமானதாக அமைந்திருந்த மனித சிந்தனைச் செல்நெறிகள், மத்திய காலத்தின் கிறிஸ்தவ மேலாண்மை நிலையில் கடவுள், சமயம் போன்றவற்றோடு நெருக்கமான உறவைக் கொண்டிருந்ததாகக் கருதப்பட்ட படியினால் கடவுள்மையச் சிந்தனைச் செல்நெறிகளால் பிரதியீடு செய்யப்பட்டன.



அருட்கலாநிதி J. C. போல் றொகான்
*(துறைத்தலைவர் / முதுநிலை விரிவுரையாளர்,
கிறிஸ்தவ நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*

இவ் ஆண்டின் அறக்கொடைப் பேருரையை வழங்கும் அருட்கலாநிதி யோ. கி. போல் றொகான் யாழ்ப்பாண மறைமாவட்ட அருட்பணியாளர்களில் ஒருவர். தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின், கிறிஸ்தவ - இஸ்லாமிய நாகரிகத்துறைகளின் தலைவராகவும், சிரேஷ்ட விரிவுரை யாளராகவும் பணியாற்றும் இவர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சிங்கள, தமிழ்க் கத்தோலிக்க மாணவர்களின் ஆன்மீக வழிகாட்டியாகவும் பணியாற்றுகிறார். 'உயிர் நுட்பவியலின் மெய்யியல் மானுடவியல் சார்புகள்' என்ற அவரது கலாநிதிப்பட்ட ஆய்வு முதல், கிறிஸ்தவ மெய்யியல், இறையியல், மானுடவியல் போன்ற துறைகளில் மேற்கொண்ட அறிவார்ந்த தேடல்களின் பயனாகப் பல ஆய்வுக்கட்டுரைகளையும், நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

**ஆயர்.வ.தியோகுப்பிள்ளை 12வது அறக்கொடைப் பேருரையில்
நேரடியாகவும், நிகழ்நிலை செயலி வழியாகவும் பங்கேற்றுப் பயன்பெற்ற
உங்கள் அனைவருக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றிகள்**

யாழ். மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம்

St. Joseph's Catholic Press, Jaffna. Phone: 021 222 2378